# தலையங்கம்

**யாதும் ஊரே, யாவரும் கேளீர்!**

*தவறு செய்த மனிதர்களை திருத்துவதற்காக அமைக்கப்பட்ட சிறைச்சாலையும் கூட ஏதோ ஒரு மாற்றத்தை மனிதர்களுக்குள்ளே ஏற்படுத்துகிறது. ஆனால், இந்த கை அடக்கப்பெட்டியில் சிறைப்பட்டு இருக்கும் பலர் தாம் கற்றதையும் மறந்து பொய்யான இன்பத்தில் மூழ்கி கிடக்கின்றனர்.*

*மனதை மயக்கும் பொய்யான இன்பத்தை மறுத்து, கண் முன் இருக்கும் இன்பத்தை இந்தப் புதையல் உங்களுக்கு தரும் என்பதில் நாங்கள் கொஞ்சம் பெருமை கொள்கிறோம்.*

*ஒவ்வொரு பக்கமும் ஒரு புது தகவலோடும் பல எழுத்தாளர்களின் திறமைகளோடும் மூடிக் கிடக்கின்றன. அதன் திறவுகோல் உங்கள் விரல்களிடம் தான் உள்ளது.*

*விரல் ரேகை பதித்து சிறைக்குள் செல்லும் நீங்கள் அதே விரலைக் கொண்டு புதையலை அடையுங்கள். வாழ்வின் பல கருத்துக்களை சுமந்துகொண்டு இந்த இதழ் அமைந்துள்ளது.*

*மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு. மானம் ஒரு மனிதனுக்கு அறிவால் உணரப்படுகிறது. நம் அறிவை கிளர்ச்சியுற வைக்கும் எந்த ஒரு படைப்பும் ஒரு புதையலே.*

*ஆகவே நாங்கள் விலைமதிப்பற்ற புதையலை உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இனி உலகம் உங்களுடையது.*

**சிறகு கிடைத்தும்**
**சிறைக்குள் அடங்கிவிடாதே**
**ஒவ்வொருவரும் தனி உரிமை**
**என்று நம்பி நமக்கென ஒரு**
**சிறை அமைத்து முடங்கிவிடாமல்**
**மேக கூட்டத்தோடு பயணம் தொடங்குங்கள்...**

**- ஆசிரியர்**

எஸ்மெகாயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

எஸ்கேஜி பவர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன்: 223243, 222846

# தூதுவின் தூது

இமயத்தைத் தொட்டவர்க்கென்ன
இருபது கை கால்களா?
மூழ்கிக் கடலில் முத்தெடுப்பவர்க்கு
மூக்குகள் என்ன முப்பதா?
முதல் மதிப்பெண் பெறுவோர்க்கு
மூளையின் எடையென்ன
முன்னூறு டன்னா?
வெற்றி பெறுபவர்கள் என்ன
வேற்று கிரகத்தவர்களா?
சாதனை புரிபவர்களும்
சக மனிதர்கள் தானே?
மூன்று வேளை சோற்றுடன்
முடிந்து போவதா வாழ்க்கை?
நிறைவேற்ற வேண்டிய பணிகள்
நிலுவையில் உள்ளன நிறைய
முடியுமென நம்பினால்
முடியும் சூடலாம்
தன்னம்பிக்கையும் தைரியமுமிருந்தால்
தடைகளையெல்லாம்
தவிடு பொடியாக்கலாம்
எங்கும் செல்லலாம்
எதிலும் வெல்லலாம்...!

**- துணை ஆசிரியர்**

எஸ்மெகாபயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# இறகுகள் இல்லை...!

கற்றல் மற்றும் குறியீட்டில்
ஒரு மனம் பறக்கிறது
தரவுகளின் பரந்த கடலில்
இறகுகள் இல்லாமல்!
கற்றலும் தழுவலும்
இடைவிடாத தேடுதல்
செயற்கை நுண்ணறிவின்
சிலிக்கான் வலைகளை
செய்த கனவுகள் விரிகின்றன
டிஜிட்டல் உலகில்!
மகத்தான சக்திகளில்
நெறிமுறைகள் பயணிக்கும்போது
அது எதிர்கால பாதுகாப்பை
இமயமாய் மாற்றிவிடும்!
குறியீட்டின் வரிசைகளில்
எதிர்காலம் பொறிக்கப்படும்
செயற்கை நுண்ணறிவு
ஒரு சக்தியாய்
புத்துயிர் பெற்று தன்னைப் புதுப்பிக்கும்!
முன்னேற்றத்தின் கருவி,
புதுமையின் திறவுகோல்,
தொழில்நுட்பத்தின் நடனத்தில்
மனிதநேயம் மிதிபடாமல்
மதிக்கப்பட வேண்டும்!

இளந்தூதுவை புதிய பரிமானத்தில் புத்துயிர் ஊட்டும் விழுதுகளாய் ஆசிரியர் குழுமத்தை வாழ்த்தி மகிழ்கின்றேன்...!

**- ஒருங்கிணைப்பாளர்**

எஸ்பெரோஸ்பயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# உள்ளே...

எஸ்.மெகாபஸார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன்: 223243, 222846

எஸ்லெகாயபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன் : 223243, 222846

## இளந்தூது

ஒப்படைப்பு வேலையொன்று
ஒப்புமையில்லா உயரம் கண்டு
ஓடும் இளம் உதிரங்களின்
ஓயா உழைப்புகளை
உலகறியச் செய்யும்
தூதொன்றை கண்டேன்...
எதுவென்றால்,
வாரங் கடந்து வருடங் கடந்து
திறமைகளைத் திரைப்
போட்டுக் காட்டும்
திகட்டாத தென்றலது
தேன் தமிழ் கண்ட
இளந்தூது.....

**சா. நுஸ்ரத் பானு**
இளம் கணிதவியல் (முதல்)

## நுண் அறிவு

தன்னை அழிக்கத் தெரியாத
இயற்கைக்குக் கிடைத்த நுண் அறிவு
செயற்கை என்றாலும்
இயற்கை தான்...!

**அ. தினேஷ்**
இளம் கணினி பயன்பாட்டியல் (நிறை)

எஸ்ஜெபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# என் தோழனாய் நீ.....

தோழமையோடு
தோள் கொடுத்தான்
நான் துவண்டெழும் பொழுது....
வல்லமையோடு வலிமை கொடுத்தான்
நான் வீழ்ந்தெழும் பொழுது....
பரிவோடு பாசம் கொடுத்தான்...
அன்போடு அரவணைத்தான்
என் மனம் உருகும் பொழுது
நண்பனாக நன்னெறிகள் தந்தான்...
நான் பாதை தவறிய பொழுது
தந்தையாக அறிவுரை தந்தான்...
தவறுகள் நான் செய்த பொழுதும்
கண்ணீரில் நான் கலங்கிய பொழுதும்
அன்னையாக ஆறுதல் கூறினான்...
சண்டைகள் பல வந்தாலும்
அன்பின் ஆழம் குறைவதில்லை...
பந்தங்கள் பல இருந்தாலும்
என் அண்ணன் தான் என்றுமே
எனக்கு முதல் பந்தம்...!!!

**இரா.சொ. ஸ்ரீநிதி**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

எஸ்கேபாயபாரீ டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# வளர்ச்சியின் பாதையில் செயற்கை நுண்ணறிவு

**முன்னுரை :**

*செயற்கை நுண்ணறிவு என்பது இயந்திரங்களால் மனித உதவியுடன் பல்வேறு செயல்பாடுகளைச் செய்யக் கூடிய நுண்ணறிவு ஆகும். தொழில்நுட்பத் துறையில், செயற்கை நுண்ணறிவு நாளுக்கு நாள் வேகமாக வளர்ந்து வருகிறது. செயற்கை நுண்ணறிவு என்பது கணினிகளின் கோட்பாடு மற்றும் மேம்பாடு ஆகும். இவ்வாறு வியப்பைத் தரக்கூடிய செயற்கை நுண்ணறிவுச் செய்திகளைக் கீழ்வரும் கட்டுரையில் காண்போம்.*

**வரலாறு :**

❖ *செயற்கை நுண்ணறிவு ஒரு புதிய தொழில்நுட்பன் என்றாலும் அது உண்மையில் புதிது அன்று. செயற்கை நுண்ணறிவு துறையில் ஆராய்ச்சியாளர்கள் மிகவும் வயதானவர்கள். செயற்கை நுண்ணறிவுப் பற்றிய சில முக்கிய கற்கள் :*

❖ *1943 ஆம் ஆண்டில், வால்டர் பிட்ஸ் மற்றும் வாரன் மெக்கல்லோக் செயற்கை நியூரான்களின் மாதிரியைக் கண்டறிந்தனர்.*

❖ *1950 ஆம் ஆண்டில், ஆலன் டூரிங் ஒரு கணினி இயந்திரம் மற்றும் நுண்ணறிவு தாளை வெளியிட்டார். அதில் அவர் ஒரு சோதனையை அறிமுகப்படுத்தினார். இது டூரிங் டெஸ்ட் என்று அறியப்பட்டது.*

❖ *1956 ஆம் ஆண்டில், முதல் முறையாக அமெரிக்க கணினி விஞ்ஞானி ஜான் மெக்கார்த்தி டார்ட்மவுத் மாநாட்டில் செயற்கை நுண்ணணு என்ற வார்த்தையை உருவாக்கினார்.*

எஸ்மெகாயபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

- 1972 ஆம் ஆண்டில், முதல் அறிவார்ந்த மனித உருவ ரோபோ, ஜப்பானில் உருவாக்கப்பட்டது.
- 1980 ஆம் ஆண்டில், நிபுணர் அமைப்புகளின் பரிணாம வளர்ச்சியுடன் செயற்கை நுண்ணறிவு வந்தது.
- 1997 ஆம் ஆண்டில், ஐபிஎம் டீப் ப்ளூ உலக சதுரங்க வெற்றியாளனான காஸ்பரோவை தோற்கடித்து, உலக சதுரங்க வெற்றியாளனை தோற்கடித்த முதல் கணினி ஆனது.
- 2006 ஆம் ஆண்டில், செயற்கை நுண்ணறிவு வணிக உலகில் வந்தது.

**செயற்கை நுண்ணறிவும் வல்லுநர்களும் :**

- ஸ்டீபன் ஹாக்கிங், பில் கேட்ஸ், எலோன் மஸ்க் போன்ற நபர்கள் செயற்கை நுண்ணறிவின் இருத்தலியல் ஆபத்து குறித்து கவலை தெரிவித்தனர்.
- 2023 இல், ஜெஃப்ரி ஹிண்டன், யோசுவா பெங்கியோ, டெமிஸ் ஹசாபிஸ் மற்றும் சாம் ஆல்ட்மேன் உள்ளிட்ட செயற்கை நுண்ணறிவு முன்னோடிகள் கூட்டறிக்கையை வெளியிட்டனர்.
- மனித குலத்திற்கு பாதுகாப்பாக இருக்க, ஒரு சூப்பர் இன்டெலிஜென்ஸ் உண்மையாக சீரமைக்கப்பட வேண்டும். மனித குலத்தில் ஒழுக்கம் மற்றும் மதிப்புகளுடன் அது அடிப்படையில் நம் பக்கம் உள்ளது. அரசியல் விஞ்ஞானி சார்லஸ் டி.ரூபன் வாதிட்டார். எந்தவொரு மேம்பட்ட நற்பண்பையும் தீமையிலிருந்து வேறுபடுத்த முடியாது. மேலும் அறிவார்ந்த இயந்திரங்கள் இயல்பாகவே நம்மை சாதகமாக நடத்தும் என்பதில் நாம் நம்பிக்கை கொள்ளக்கூடாது என்று எச்சரித்தார்.
- 2014இல் தீங்கு விளைவிக்கும் செயற்கை நுண்ணறிவு இன்னும் பல நூற்றாண்டுகள் தொலைவில் உள்ளது என்று ரோட்னி ப்ரூக்ஸ் கூறினார்.

எஸ்கேராயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

**செயற்கை நுண்ணறிவின் நன்மைகள் :**

❖ *மனிதர்களால் அடைய முடியாத உயிர் வாழ்வைக் கண்டறிய முடியாத ஆபத்தான சூழ்நிலைகளில் செயற்கை நுண்ணறிவு மிகவும் உதவியாக இருக்கும்.*

❖ *செயற்கை நுண்ணறிவின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்று, அது மனிதத் தவறுகளைக் குறைக்கும்.*

❖ *கூகுள் அசிஸ்டெண்ட், அலெக்சா போன்ற அன்றாட நடவடிக்கைகளில் இது மிகவும் உதவிகரமாக உள்ளது.*

**செயற்கை நுண்ணறிவின் தீமைகள் :**

❖ *செயற்கை நுண்ணறிவு அமைப்புகளுக்கு உள்ளீடுகள் சரியாக வழங்கப்படாவிட்டால், அது தீங்கு விளைவிக்கும்.*

❖ *செயற்கை நுண்ணறிவுக்கு எப்போதும் ஒரு அச்சம் உள்ளது. அது முன்னேறினால் மனித குலத்திற்கு ஆபத்து விளைவிக்கும்.*

❖ *செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பு மிகவும் விலை உயர்ந்தது.*

**முடிவுரை :**

*நிலவில் ஏவப்பட்ட நமது சந்திராயன் - 3 விண்கலத்தில் கூட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறு செயற்கை நுண்ணறிவின் வரலாறு, நன்மை, தீமைகள் பற்றி இக்கட்டுரையின் மூலம் நாம் அறிந்தோம்.*

**ர. மதுமிதா**

இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

எஸ்கேபாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846




**ர. ராஜலெட்சுமி**

இளம் வணிகவியல் (இடை)

எஸ்செகாயபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன்: 223243, 222846

# எழுதுகோல்

காகித உடலுக்கு
உயிர் கொடுத்தவள் நீ...
ஊமையையும் பேச வைத்த
உயிரோவியம் நீ...
எண்ணங்களை தொடுத்து
எழுத்துக்களாய் எடுத்து
கற்பனை உரமிட்டு
கவிதையை அறுவடை செய்கிறேன்...
என் உளரல்களைக் கேட்டு
எழுத்துக்களாய் வடித்து
எனக்குள் இருக்கும் எழுத்தாளரை
எனக்கே அறிமுகம் செய்துவிட்டாய்...
தட்டச்சு கணிப்பொறி தீண்ட முடியாத
தனித்துவம் நீ!
தலைகுனிந்து கிறுக்கியே
தான் உயர்ந்த வேதம் நீ....
உனை யாருக்கும் புரியாதபடி
கிறுக்குபவன் மருத்துவராகிறான்
கிருக்கன் போல் உனை
தொடர்ந்து கிறுக்குபவன்
கவிஞன் ஆகினான்...

**க. கார்னீயா**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

எஸ்கேபயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## நான் வகுப்பறை பேசுகிறேன்

மனத்தை மயக்கும் மழலைப் பேச்சு
ஒளிரும் மத்தாப்பு சிரிப்பு.....
சின்னச் சின்ன சண்டைகள்
சிட்டுக்குருவிகளாய்ச் சிறகடித்த சின்னஞ்சிறு பாதங்கள்
காணவில்லை காணவில்லை.....
தொலைவில் கூட காணவில்லை.....
கனிவான பார்வை கண்டிப்பான வார்த்தை
கதை சொல்லும் நேர்த்தி
பாடம் கற்பிக்கும் பாங்கு
கேட்கவில்லை கேட்கவில்லை.....
அமைதியிலும் கேட்கவில்லை.....
மணியோசை கேட்டு
மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய நீங்கள்
மறுநாள் வரக் காத்திருக்கிறேன்.....
நாட்கள் நகர்ந்தன, மாதங்கள் மறைந்தன
வருடங்கள் வந்து போயின
காத்திருக்கிறேன்!
திறந்த கதவுகளுடன்
நீங்கள் அமரும்
சிம்மாசனங்களுடன்!

**க. கார்னீயா**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

எஸ்கேயார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## வேண்டுதல்

கோவில் கோபுரங்களைச்
சுற்றி வரும் பறவைகளுக்குப்
பெரிதாக என்ன வேண்டுதல்
இருக்கபோகிறது.....

## தூண்

எந்நேரமும் வீட்டின் நாலாபுறமும்
நிற்பவனே! சற்று அமரலாமே....
மங்கையின் கவலைக்குத்
தோள் கொடுப்பவனே!
ஆண்களின் கோபத்திற்கு
அடிவாங்குபவனே!
கட்டுக்கடங்காத கம்பீரத்துடன்
நிற்பவனே!
இனி வரும் காலத்தில்
எங்குக் காண்பேன் உனை?
எப்போது பார்ப்பேன் உனை?
மரமெல்லாம் வெட்டப்படுகின்றன!
அவ்வழியில் நீ மட்டும் எப்படி நிலைத்திருப்பாய்?
வரும் காலத்தில் நிச்சயம்
எவரிடமாவது சொல்வேன்...
அன்று நான் சாய்ந்துக்கொள்ள
தூணாவது இருந்தது என்று!

**ர. அபிராமி**
இளம் வணிகவியல் (முதல்)

எஸ்கேபயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# மனித மாண்பு

**முன்னுரை :**

ஒருவரின் சமூகத் தகுதி பொருளாதார நிலை, கல்வித் தகுதி, சாதி, பாலியல், நிறைகள், குறைகள் ஆகியவற்றைக் கொண்டு அவரின் மனிதத் தன்மையை எடைபோடாமல், அவர் மனிதராக இருப்பதாலேயே அவரை மதிப்பதும், நேசிப்பதும், ஏற்றுக்கொள்வதுமே மனித மாண்பாகும்.

**மனித மாண்பு :**

சாதி, சமயத்தின் பெயரால், ஒருவரை ஒருவர் இகழ்வதும், கொலை செய்வதும், சித்திரவதை செய்து வாழ்வதும் மனித மாண்பு ஆகாது. பணத்தாசையாலும், வன்புணர்வுச் செயல்களாலும், பிறரைத் துன்புறுத்தி, வன்முறைகள் புரிந்து மனித மாண்பு ஆகாது.

மனிதரின் உள்ளார்ந்த ஏக்கம், தனி மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும், காக்கப்பட வேண்டும் என்பதே. ஆதலின் மனிதரை எவ்வித வேறுபாடுமின்றி மனிதராகப் பார்ப்பதும், மதிப்பதும் மனித மாண்பு ஆகும்.

**நிதர்சன உண்மை :**

மிகச் சிறந்த பேச்சாளர் ஒருவர், பெருங்கூட்டத்தில் ஆயிரம் ரூபாயை எடுத்துக்காண்பித்து, இது யாருக்கு வேண்டும் என்று வினவினார். கூட்டத்தினர் அனைவரும், எனக்கு வேண்டும் எனக்கு வேண்டும் என்றனர்.

அடுத்து அவர் அந்த ஆயிரம் ரூபாயைக் கசக்கி, இது யாருக்கு வேண்டும்? கையை உயர்த்துங்கள் என்றவுடன் அனைவரும் கைகளை உயர்த்தினர். பிறகு அவர் அந்த ஆயிரம் ரூபாயை எடுத்துத் தரையில் உள்ள மண்ணில் புரட்டி,

எஸ்.கே.ஜோசப் ஜெயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

அழுக்காக்கி விட்டு மறுபடியும், இது யாருக்கு வேண்டும்? என்று கேட்டார். இந்த ஆயிரம் ரூபாய் எனக்கு வேண்டும் எனக்கு வேண்டும் என்று கூக்குரல் இட்டனர்.

உயிரற்ற இந்த ஆயிரம் ரூபாயை மதிக்கும் நாம், உயிருள்ள மனிதர்களை மதிக்கிறோமா? ஆயிரம் ரூபாய்த் தாள் புதிதாக இருந்தபோதும், கசங்கியபோதும், அழுக்கானபோதும், அதன் மதிப்பு குறையவில்லை. நம்மோடு வாழும் சகமனிதர்கள், ஏழைகளாகவோ, கூலித் தொழிலாளர்களாகவோ, உடல்நலம் குன்றியவர் களாகவோ தாழ்த்தப்பட்ட சாதியராகவோ, பிறமொழி பேசுபவர்களாகவோ இருந்தாலும் அவர்களை மனிதர் என எண்ணி மதிக்க வேண்டும். அவர்களும் மாண்புள்ளவர்கள் என உணர வேண்டும். ஏனெனில் அவர்களும் கடவுளின் படைப்பு என்பதை நாம் உணர வேண்டும்.

ஆனால், ரூபாய் நோட்டுக்குக் கொடுக்கும் மதிப்பைக்கூட மனிதர்களுக்குக் கொடுப்பதில்ல என்பது தான் நிதர்சன உண்மை.

**உணர்வுகள் :**

மனிதரை நல்ல மனிதராகவும், தீய மனிதராகவும் மாற்றுபவை உணர்வுகள். நல்ல உணர்வு பலரை ஈர்க்கும், வாழ வைக்கும். நல்ல உணர்வு கொண்டோர் நல்ல உடல், உள்ள நலத்தோடு மகிழ்ச்சியாக இருப்பர். வாழ்க்கையை அனுபவிப்பர். தீய உணர்வு பகைமையை வளர்க்கும். உறவுகளைச் சிதைக்கும். தீய உணர்வு கொண்டோர் எப்போதும் மன அழுத்தத்தோடு, விரக்தி மனப்பான்மையோடு இருப்பர். இவர்கள் வாழ்க்கையை வேண்டா வெறுப்போடு வாழ்வர்.

எஸ்மெகாயபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

பிறப்பினால், வளர்ப்பினால், சூழ்நிலையால், ஆசைகளால், தேவைகளால், மகிழ்விக்கும் உணர்வுகளும், காயப்படுத்தும் உணர்வுகளும் மனித மனத்தில் உருவாகும். அதனைப் பகுத்துணர்ந்து பிறரைக் காயப்படுத்தும் உணர்வுகளைக் களைந்து, மகிழ்வுக்கும் உணர்வுகளை வளர்த்துகொள்ள வேண்டும்.


**முடிவுரை :**

அனைத்து மனிதருக்குள்ளும் பொதிந்துள்ள மனித மாண்பு, சமத்துவம், அடிப்படை உரிமைகள் ஆகியவையே இவ்வுலகின் சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான அடித்தளம். உரிமைகள், சுதந்திரங்கள் அனைத்தும் இனம், மொழி, நிறம், பால், சமயம், அரசியல் கொள்கை, தேசப் பின்னணி, சொத்து, பிறப்பு, தகுதி போன்ற எவ்வித வேற்றுமையும் இன்றி அனைவருக்கும் உரியனவாகும்.

**உணவு ஒருவரை வளர்க்கும் – நல்**
**உணர்வு பலரை ஈர்க்கும்**
**கடினமான உணர்வுகள்**
**மனிதரையும், இயற்கையையும் அழிக்கும்**
**மென்மையான உணர்வுகள்**
**மனிதரின்**
**மாண்பையும், வளர்ச்சியையும் மதிக்கும்.**

**ச. கிருஷ்ணவேணி**
இளம் உயிரித்தொழில் நுட்பவியல்

எஸ்கேஜாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846




**ரா. அட்சயா**

இளம் கணினி பயன்பாட்டியல்

(இடை)

எஸ்எம்கெஃபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

மதிப்புமிக்க நங்கை அவள்...
மதிப்புக்கு மாற்றாக திரு சேர்த்துக்கொண்ட
நங்கை அவள்...
அவள் என்பதா இல்லை
அவன் என்பதா...
அவன் அவளாக மாறியதை அவலம் என
சொல்லும் அவலத்தைச் சொல்வதா...
பிறப்புறுப்பில் சாதி பார்க்காத இ(ஈ)னம்
தான், அதிலே பால் இனம் பார்க்கிறது...
கணிதத்தில் கூட அந்த எண்ணை
வினவும் போது அவர்கள் நினைவிலே
அரங்கம் நகைக்கிறது,
அதைச் சுவரும் கூட தடுக்க மறுக்கிறது....
ஈன்ற பின் அடையும் தாயுணர்வு
அவள் ஏங்கிய ஏக்கத்தில் ஈடாகுமா...
உருவம் குலைந்த விலங்கினைப் போல
அவளை ஒளிந்து நின்றே பார்க்கிறோம்...
உடலுக்கு தெரியுமோ அவள்
உணர்வின் மாற்றங்கள்...
ஒதுக்கப்பட்ட வார்த்தைகளாயின
உஸ்சு, ஒன்பது, கோசா...
மனிதன் என்ற வார்த்தை மட்டும்
அவர்களுக்கு மறுக்கப்பட்ட ஒன்றானது...
வாழவே தகுதியில்லை, அவள்
கேட்டால் வாழ்வாதாரம் தருவாரோ...
தெருக்கூத்தின் தேவதைகள் நீங்கள்...
அவள் காதலைக் காமமாகப் பார்த்து
காயப்படுத்த ஒரு கூட்டம்...

எஸ்கொயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

கழிவறை கட்டடத்தில் அவளைக்
காணவில்லை என்று எழுதுங்கள்...
ஆசையெல்லாம் ஒன்று தான்,
அருகில் வரும்போது அக்கா, அம்மா என்ற
சில வார்த்தைகள்தான்....
உயர்திணையில் கூற நாங்கள் உரியவர்களும்
அல்லர்...
அஃறிணையில் கூற நீங்கள் அவைகளும்
அல்ல....
அது என்பதை ஏற்கும் வரை
நீ அவள் தான்...

**செ. இனியாஸ்**
இளம் கணினி பயன்பாட்டியல் (நிறை)

## பெண் விடுதலை

எல்லை மீறிய விடுதலை
தொல்லைகள் தாமே தந்திடும்...
எல்லையில் மட்டுமா...
அன்னியர் தொல்லைகள்?
இறைவனால் கூட பாதுகாக்க இயலவில்லை
பல உயிர்களை...

**ஞா. ரித்திகா**
இளம் கணினிஅறிவியல் (முதல்)

எஸ்கேராயபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# புத்தகம்

**முன்னுரை :**

திறந்து பார்த்தால் வெறும் எழுத்துக்கள். அதை படித்துப் பார்த்தால் வாழ்க்கையின் வெற்றி படிகட்டு, அதுவே புத்தகங்கள் ஆகும். சிறந்து திகழும் மனிதர்கள் அனைவரும் புத்தகப்பிரியர்களே. புத்தகத்தின் இன்றியமையாமைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**புத்தகத்தை பற்றி கூறியவர்கள் :**

சிசரோ புத்தகம் இல்லாத அறை உயிரில்லாத உடலுக்கு ஒப்பானது என்கிறார்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மனிதனுடைய ஆகச் சிறந்த கண்டபிடிப்பு புத்தகங்கள் தான் என்கிறார்.

திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞருமான நா.முத்துக்குமார் புத்தகங்களை நேசி ஒரு புத்தகத்தைத் தொடுகின்ற போது நீ ஒரு அனுபவத்தை பெறுவாய் என்கின்றார்.

**புத்தகத்தின் இன்றியமையாமை :**

நம் உலகில் உள்ள அனைத்து மேதைகளும் புத்தகம் படித்ததால்தான் மேதையானார்கள். நூல்களை வாசிப்பதும் எழுதுவதும் அற்புதமான கலையாகும்.

நேரு அவர்கள் தன் சடலத்தின் மீது மலர்களுக்குப் பதிலாகப் புத்தகங்களை வைக்கச் சொன்னார். இது அவர் புத்தகங்கள் மீது கொண்டுள்ள பிரியத்தை வெளிப்படுத்துகின்றது.

கிரேக்க சிந்தனையாளரான சாக்ரடீஸ் மரண தண்டனை விதிக்கப்பட்டு நஞ்சு கொடுக்கும் வரை புத்தகம் படித்துக்கொண்டிருந்தார்.

எஸ்கேஆர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சமயம் அறுவைச்சிகிச்சை அன்று தான் படித்த புத்தகத்தின் சில பக்கங்கள் மீதம் இருப்பதால் அதை முடிக்கும் வரை உயிர்காக்க அறுவைச்சிகிச்சையைத் தள்ளி வைக்கச் சொன்னார்.

இவ்வாறு புத்தகம் படிக்கும் புத்தக அடிமையாளர்கள் நிறையபேர் இருக்கிறார்கள்.

**உதவும் புத்தகங்கள் :**

நம் அறிவை வளர்த்துக்கொள்ள புத்தகங்கள் மிகவும் உதவும். நாம் வரலாற்றையும், முன்பு நிகழந்ததையும் நாம் இன்று தெரிந்துகொள்வதற்குப் புத்தகங்கள் மிகவும் உதவுகின்றன. நம் முன்னோர்கள் நமக்கு உதவும் வகையில் நமக்கு தேவையானவற்றை பனை ஓலையில் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலானோர் புத்தகத்தை படிப்பது இல்லை. நம் அனைவரும் அனைத்து நேரத்திலும் அலைபேசி சிறையில் சிக்கிக்கொண்டோம்.

**சிறந்த புத்தகங்கள் :**

நாம் படிக்கும் புத்தகங்கள் சிறந்த புத்தகங்களாக இருக்க வேண்டும். நமக்கான நல் குணங்களையும் நல் அறிவையும் தேடித் தரும் விதத்தில் புத்தகங்கள் இருக்க வேண்டும். சிறந்த புத்தகங்கள் என்பன நம் ஆர்வத்தை தூண்டும் வகையில் இருக்க வேண்டும். நாம் படிக்க ஆரம்பித்ததை விடாமல் தொடர்ந்து நம்மை படிக்க வைக்கும் புத்தகங்களே என்றும் சிறந்த புத்தககங்களாய்த் திகழ்கிறது. எனவே, நாம் சிறந்த புத்தகங்களை தேடிப் படிப்போம்.

எஸ்கேராயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

**புத்தகம் ஒரு நல்ல நண்பன் :**

*ஒருவர் படிக்கும் புத்தகம் அவருக்கு ஒரு நல்ல நண்பனாக இருக்க வேண்டும். ஒருவர் வாழ்க்கையில் உள் இருளுக்கு ஒளியாகவும், நல்ல வழிகாட்டும் நண்பனாகவும் புத்தகங்கள் இருக்கும். நாம் ஓய்வு நேரங்களையும் புத்தகம் படிக்க நமக்கு தானாக தோன்றும் எப்பொழுதென்றால் நீங்கள் படிக்கும் புத்தகம் உங்களுக்கு ஒரு நல்ல நண்பனாக திகழும்போது.*

**முடிவுரை :**

*எனவே, நாம் அலைபேசியில் வீணாக்கும் நேரத்தை புத்தகம் படிக்க பயன்படுத்தினால், நம் வாழ்க்கையில் வெற்றிகள் அதிகரிக்கும். நம் வாழ்க்கையில் வெற்றி பெற்றவராக மாறலாம்.*

**ம. வினிஷ்குமார்**

இளம் கணினி அறிவியல் (முதல்)

## காற்று

சுட்டெரிக்கும் வெப்பத்தை தணிப்பதற்கு
சில்லென வரும் தேவதை நீ...
குளிரில் நடுங்குபவர்களைக் கேளிக்கை செய்து
மகிழும் அழகிய ராட்சசியும் நீ....
காற்றாய் நுழைந்து இசையாய் வரும் நீ
இல்லையென்றால் மண்வாசம் என்பதே இல்லை
மெல்ல வீசி குழல்களை கலைக்கும்
மனம் கொண்ட நீ...
சில நேரங்களில் கோபம் கொண்டு
உயிர்களை அழிப்பது ஏனோ...?

**அ. சாருமதி**

இளம் கணினி பயன்பாட்டியல் (முதல்)

எஸ்கோபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# வலி

துயரத்தில் இருக்கையில்
ஆறுதல் அளிக்கும் முகம்
பார்த்து சொல்ல
இதழ் திறக்கையிலும்...

மெய்யிலும், மனதிலும்
ஏற்படுவதை விடுத்தும்...

வாழ்வின் ஒவ்வொரு
சதுரத்திலும் போராடி
வென்றும்...

பல பழிச்சொற்களை
கடந்தும்...

சமூகத்தால் தரும்
விளைவுகளை அகற்றியும்
குடும்ப சூழ்நிலையை
மனதில் சுமந்தும்
முன்னேறும் ஒவ்வொரு
கால்களும்
வலியில் தான்
பிரசவிக்கிறது.

**செ. பிரியதர்ஷினி**
இளம் வணிகவியல் (இடை)

எஸ்கேராயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# அதோ! வானில் விமானம்

ஓசையோ ஒருவருக்கே அகப்படும்
மெய்யா பொய்யா என்று அறிய
வினாடிகள் ஆகிவிடும்...

அசந்த சில நேரத்தில்
அருகாண்மையில் மறைந்துவிடுவாயோ
என்று பின்னங்கால்
அணல் எடுக்க ஓடி,

பாதம் பதைபதைக்கப் பதறி,
மேகம் தனக்கே
சொந்தமானது போல
பெருமையுடன் மூச்சு
இரைக்க வந்து,

பதில் வராது என்று
அறிந்தும் கைக்காட்டிய அந்த
ஒரு நிமிட மகிழ்ச்சியை
ஓர் ஆண்டாக எண்ணி மகிழ்கிறேன்...

உன்னில் பறக்க முடியாமல்
இருக்கலாம்...
ஆனால் நீ பறப்பதைக் கண்டு
மனம் என்னும் ஆகாயத்தில் தினமும்
பறக்கிறேன், எந்தவித
கடவுச்சீட்டும் இன்றி...!

**ர. அபிராமி**
இளம் வணிகவியல் (முதல்)

எஸ்கேராயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# அந்த நாள்

அழகான காலைப்பொழுது சூரியனின் கதிர்கள் தன்மீது படுவதுகூட தெரியாமல் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளாள் நிலா. நிலாவோ பன்னிரெண்டு வயது மதிக்கதக்க ஒரு பெண். அவளுக்கென வாழும் இருவர் அவளது தாத்தா, பாட்டி மட்டும் தான். நிலாவிற்கு தாய் தந்தையில்லா குறையைத் தீர்க்கும்படி அவர்கள் நடந்து கொள்வார்கள். நிலாவே குறும்புக்கார பெண் தனக்கு படிப்பில் நாட்டமில்லை யென்றாலும் தனது தாத்தா, பாட்டியின் வார்த்தைகளுக்காகப் படிப்பாள். பள்ளியின் முதல் நாள் நிலாவை அவளின் பாட்டி எழுப்புகிறார் நிலாவோ ஆழ்ந்த உறக்கத்திலுள்ளாள். அதன் பின் மெள்ளமாக பள்ளிக்கு கிளம்புகிறாள். காலம் கடந்தது. மிகவும் தாமதமாக செல்கிறாள் பள்ளிக்கு. ஆசிரியர் அவளை தண்டித்தார் பின் அறிவுரை கூறினார். நிலாவோ அமைதியாக கேட்டபடி நின்றாள். ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தார் அப்போது வகுப்பறைக்கு சுற்றறிக்கை ஒன்று வந்தது. அதில் மாபெரும் சிறுகதை கூறும் போட்டி நடைபெற உள்ளதால் விருப்பமுள்ள மாணவர்கள் பெயரை பதிவு செய்யலாமென்று கூறுகிறார். நிலாவிற்கு பங்கேற்க ஆர்வம். ஆனால் ஒரு பயம். ஏனென்றால் மேடையில் பேசியதுமில்லை, எந்த நிகழ்ச்சியில் பங்கேற்றதுமில்லை. அதனால் தயங்கி நின்றாள். பின் நிலா தன்மனத்தில் வெற்றியோ தோல்வியோ முயற்சி செய்வோம் என்று எண்ணி தனது பெயரை பதிவு செய்கிறாள். அன்று மாலை பள்ளி முடிந்து வீடு திரும்புகிறாள். தனது தாத்தா பாட்டி இருவரும் வீட்டினருகில் அமர்ந்து தேநீர் அருந்தி கொண்டு உள்ளார்கள். அப்போது நிலாவை கவனித்த அவர்கள் அவள் முகம் வாடியிருப்பதை கண்டு அவளிடம் கேட்டார்கள். அவளோ பள்ளியில் நடந்ததை கூறினாள். பின் தனது பெயரையும் கொடுத்துள்ளதாக சொன்னாள். இதைக் கேட்ட அவளது பாட்டி அவளுக்கு ஒரு கதையை கூற ஆரம்பித்தார்.

எஸ்கேராயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

முன்னொரு காலத்தில் வனம் என்னும் ஓர் ஊரில் சீதா என்ற ஒரு பெண் வசித்து வந்தாள். அவளுக்கு பெரிய மருத்துவராக வேண்டுமென்ற ஆசை இருந்தது. அவளோ ஏழைக் குடும்பத்தில் இருந்தவள். தன் தாய்க்கு கண் பார்வையில்லை. தந்தைக்குச் செவி சரியாக கேட்காது. தன் பெற்றோர்கள் படும் துன்பத்தை காணமுடியாத சீதா தனது சிறுவயதிலிருந்து மருத்துவராக வேண்டுமென்று ஆசைப்பட்டாள். தன் படிப்பிலும் முதல் மாணவியாக வலம் வந்தாள். அதனை தொடர்ந்து தன் தாய் தந்தையை பார்த்துக்கொள் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள். படிப்பு மற்றும் வேலை இரண்டையும் சமமாக பார்த்தாள். முடிந்தவரை தன் கனவான மருத்துவத்திற்கு முன்னுரிமையை அளித்தாள் என்று கதையை கூறிக் கொண்டிருக்க நிலாவோ அப்ப பாட்டி, சீத்தாவோ ஏழை பெண். மருத்துவராவது எப்படி சாத்தியம். இக்காலத்தில் படிப்பையும் பணத்தினால் வாங்கி விடுகிறார்கள். அப்போ சீதா எப்படி மருத்துவரானார் என்ற வினாவை கேட்கிறாள். பாட்டியோ, இதைக் கேள் என்கிறார். மீண்டும் கதையை தொடர்கிறார். சீதா தனது பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றது மட்டுமில்லாமல் தமிழ்நாட்டிலேயே முதல் மாணவியாக இருந்தாள். அவளைக் காண பலர் ஆசைப்பட்ட நிலையில் அவள் வீட்டிற்குச் சென்றனர். அவளைக் கண்டு அனைவரும் திகைத்து நின்றனர். ஏனென்றால் ஒரு சிறிய குடிசை வீட்டில் தான் பெற்றோர்களுடன் வசித்து வந்தது மட்டுமில்லாமல் அவள் தன் தந்தையின் ஒரு காணி நிலத்தில் விவசாயமும் செய்துவந்தாள். இதைக்கண்ட அனைவரும் திகைத்து நின்றனர். அதன் பின் பலர் முன் வந்து சீதாவின் ஆசையைக் கேட்டனர். அதில் அவளே தனது நிலை எவருக்கும் வரக்கூடாது என்றாள். காரணம் தன் வாழ்க்கையில் வெற்றிபெற பலரின் கொடுஞ் சொற்கள் தான் காரணமென்றாள். தனது நிலையைக் கண்ட உதாசீனப்படுத்தியவர்களின் மத்தியில் இன்று எனது

எஸ்மெகாயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

விடாமுயற்சியால் தலைநிமிர்ந்துள்ளேன் என்றாள். அனைவரும் அவளைப் பாராட்ட அவள் மருத்துவராக வேண்டும் என்ற ஆசையுள்ளதாக கூறினாள். அவளுக்குதவ பலர் முன் வந்தனர். ஆனால், அவளோ தனக்கு தான் நிலையைக் கண்டு உதவ வேண்டாம் எனது திறமையைக் கண்டு உதவுங்கள் என்றாள். மனம் சிலிர்க்க அவளுக்குப் பலர் உதவ இன்று அவள் கனவு நிறைவேறும்படி மருத்துவராக இருக்கிறாள். அவளைப் பாராட்ட அவள் பள்ளியில் ஒரு விழா நடைபெறுகிறது. அதில் அவள் குழந்தைகளிடம் உரையாடுகிறாள். அதில் ஒருவரை இச்சமுதாயம் அவரது திறமையை கொண்டே மதிப்பீடும் படிப்பு வாழ்க்கைக்கு அவசியம். ஆனாலும் உது திறமையே உன்னை யார் என்று நிர்ணயிக்கும். இன்பம் துன்பம் இரண்டும் கலந்த இந்த வாழ்க்கையில் ஓடிக்கொண்டே இரு. வெற்றி உன்னைத் தேடி வரும் என்கிறாள். உனக்கு சிறந்த நண்பன் நீ தான். உன்னை உனக்குள் தேடிப்பார், நீ யார் என்னும் நிலை உனக்கு தெரியும் என்கிறாள். அவள் வார்த்தையைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். அந்த ஒரு நாள் அவள் வாழ்க்கையை மாற்றியது என்ற கதையை பாட்டி கூறினார். நிலாவோ தனக்குள்ளிருந்த அச்சத்தை நீக்கி மன தைரியத்துடன் இன்றே ஒரு சிந்தனை என்ற சிறுகதையைத் தான் முயற்சியால் எழுதியதை கூறுகிறாள். அவள் பேசி முடிக்க இரு கைகள் இணைந்து தட்டும் அந்த கைத்தட்டல் ஒலி அவளது செவிகளுக்கு விருந்தாய் அமைய இதனைக் கண்ட அவளது தாத்தா, பாட்டி மனம் குளிர அவள் வென்று காட்டினாள். அந்த ஒரு நாள் அவள் யார் என்பதை உணர்ந்தாள். பின் மூவரும் வீடு திரும்பினார்கள். நிலாவோ தன் பாட்டியிடம் நீங்கள் சீத்தாவைப் பற்றி கூறினீரே இப்போது சீத்தா எங்குள்ளார் என்றாள். பாட்டியோ வானில் தெரியும் நட்சத்திரங்களைக் காட்டினார். ஆம் இதில் சீத்தா தான் நிலாவின் தாய் அவள் இறந்த பின் அவளது கண்களை அவளது தாயிற்கு வைத்தனர். தான் இறக்கும் தருணத்தில் சீத்தா தனது குழந்தையான

எஸ்கேராயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

நிலாவை ஒரு கவிஞராக இருக்க வேண்டுமென்று கூறியிருப்பாள். இவையனைத்தையும் தான் மனத்தில் நினைத்து கொண்டு பாட்டி நிலாவிடம் நடந்ததைக் கூற, தான் அம்மாவின் கனவை நிறைவேற்ற நிலா வெற்றியை நோக்கி நடைபோட ஆரம்பித்தாள். இன்றோ பலர் வியக்கும்படியாக ஒரு சிறந்த கவிஞராக மாறி வலம் வருகிறாள். இறுதியில் தான் அம்மாவின் கனவை நிறைவேற்றிய அந்த நாள் அவள் வாழ்க்கையை மாற்றியது.

**தி.சு. ரோஷினி**
இளம் ஆங்கிலம் (முதல்)

## நேரம்

இருப்பவனுக்கு நீ அலட்சியம்,
இல்லாதவனுக்கு நீயே அவசியம்....
தேடியவனுக்கு நீ யோகம்;
தொலைத்தவனுக்கு நீ சாபம்...
அனுபவித்தவனுக்கு நீ சொர்க்கம்,
துறந்தவனுக்கு நீ நரகம்...
நேரத்தைச் செதுக்கியவன்,
அதனைச் சிலையாக்குகிறான்...
நேரத்தைச் சிதைத்தவன்,
தானே சிதைந்து போகிறான்...
உன்னை இப்போது சிலையாக்கி விட்டேன்,
இதன் வாயிலாக....!

**ச.பவானி**
இளம் உயிரி தொழில்நுட்பவியல் (இடை)

எஸ்கெபாயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## மழைத்துளி

மின்னல் ஒளியே விளக்காகி
ஏழு வண்ண வானவில்லை
சேலையாக கட்டி
விண்ணில் இருந்து
மண்ணிற்கு வருகிறாள்
மழைத்துளி எனும் மணப்பெண்
அவளை வரவேற்க
மகிழ்வுடன் நிற்கிறது மக்கள் கூட்டம்.


**வே. அனிதா**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

## வார்த்தை

எழுதுகோலின் எண்ணமெல்லாம்
எழுத்தாக உருவெடுக்க
கனவைக் கவிதையாக்கி
காலம்தோறும் நினைவூட்டும் வார்த்தைகள்...
பேசுவதைவிட எழுதும் வார்த்தைக்கு
பலம் அதிகம்!
ஒரு கவிஞனுக்கு அவன் வார்த்தையே பலம்!
உன் பலவீனத்தையே பலமானதாக
மாற்றினால் மாறும் உலகு அதன்
மகத்துவத்தை உணரும்.

**இரா. தயாநாயகி**
இளம் உயிர்தொழில்நுட்பவியல் (இடை)

எஸ்மெகாயபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846




**பா. ரட்சதா**

இளம் கணினி அறிவியல் (முதல்)

எஸ்கேயார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# எது அழகு?

கண்மை தீட்டிய கண்களும்,
கள்ளம் நிறைந்த உள்ளமும்
கவரும் உயர்ந்த ஆடையும்,
காசு நிறைந்த கைகளும்,
கர்வம் நிறைந்த பேச்சும், பிறரை
இகழ்ந்து செய்யும் செயல்களும்,
இவை மட்டுமே அழகு, ஆனால் அது
இந்த நிலத்தில் உள்ள வஞ்சகர்களுக்கு மட்டுமே!
கவலை இருந்தாலும், கருணை நிறைந்த
    கண்களே அழகு!
காரணம் கருதாமல், உதவும் உள்ளமே
    அழகு!
ஏழையாக இருந்தாலும், ஒருவரை
    ஏளனம் செய்யாமல் இருப்பவரே அழகு!
பதவி இருந்தாலும், பணிவான
    பேச்சே அழகு!
பணம் அதிகம் இருந்தாலும்,
    பகுத்தறிவே அழகு!

**ச. இலக்கியா**
இளம் உயிரிதொழில்நுட்பவியல் (இடை)

எஸ்கேபாயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846



**த. மனிஷா**

இளம் உயிரிதொழில்நுட்பவியல் (முதல்)

எஸ்.எம்.கோபாலர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## தமிழ் சிலை

கல்வி கற்க ஆசை உண்டு ஆனால்,
கற்க வசதியில்லை
சீருடை அணிந்து வகுப்பில் அமர்ந்து
படிக்க ஆசை உண்டு ஆனால்,
சீருடை அணிய வசதியில்லை.
எழுத்தாளராகவோ அல்லது பேச்சாளராகவோ திகழ
ஆசை உண்டு ஆனால்,
என்னை வடிவமைத்துச் செதுக்கி சிலையாக மாற்ற
ஆசிரியர் இல்லை. ஆனால்,
என் தமிழ் அன்னை அவளுடைய
தமிழ் மொழியினை வைத்து என்னை
அழகாய் வடிவமைத்து செதுக்கி
அழகிய தமிழ்சிலையாக உருவாக்கினாள்.

**கோ. சந்தியா**
இளம் இயற்பியல் (முதல்)

## மாதவிடாய்

தலைப்பைக் கண்டவுடன் மறுபக்கம்
திருப்பும் ஒருவனுக்கு....
யாரோ ஒருவன்
புகையிலை கேட்கும்போது வராத கூச்சம்....
ஒரு பெண் தன் உணர்வின்போது
ஒரு நாப்கின் வாங்கச் சொன்னால்
கூச்சத்தோடு அருவெறுப்பும் சேர்ந்து வருகிறது...
மாதத்தில் மூன்று நாள்
மரணத்தால் போரிடும் பெண்ணை
போற்றவில்லை என்றாலும்
காயப்படுத்தாதீர்கள்...

**இரா. அக்ஷயா**
இளம் உயிரிதொழில் நுட்பவியல் (இடை)

எஸ்கேஜெயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# குப்பைகள்

**முன்னுரை :**

குப்பை என்பது பயன்படுத்திய கழிவுகள் என்று கூற முடியும். இது எந்தவகையான பொருட்களில் இருந்தும் உருவாகலாம். இவ்வகையான குப்பைளினால் பாரிய அளவிலான பிரச்சனையாக உள்ளது.

குப்பைகளை எங்கு கொட்டுவது என்று தெரியாமல் முறையற்றவிதத்தில் கொட்டுவதனால் தெருக்கள், ஆறுகள், குளங்கள், குட்டைகள், கடல்கள் என அனைத்து நீர் நிலைகளிலும் நிறைந்து பாரிய மாசடைவுகள் ஏற்படுகின்றன. இதனால் மனிதனுடைய வாழ்வாதாரங்களும் உயிரினங்களும் மோசமாக பாதிக்கப்படுகின்றது. இவை தொடர்பான செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**குப்பைகளின் வகைகள் :**

திடமான குப்பைகளை நான்கு விதமாக பிரிக்கலாம். இ-வேஸ்ட் எனப்படும் எலக்ட்ரானிக் கழிவுகள், சமையல் அறையில் இருந்து வரும் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகள்.

இந்த நான்கு கழிவுகளையும் பிரிக்காமல் ஒரே இடத்தில் கொட்டுவதனால் நாட்கள் செல்ல இந்த நான்கு குப்பைகளும் இணைந்து ஒருவிதமான இரசாயன செயற்பாடுகளுக்கு உள்ளாகி அதனை அண்டியுள்ள நிலத்தடி நீரை கூட பயன்படுத்த முடியாமல் செய்துவிடும்.

**கழிவுப் பொருட்கள் மேலாண்மை :**

கழிவுப் பொருட்கள் மேலாண்மை என்பது கழிவு பொருட்களைச் சேகரித்தல் கொண்டு செல்லுதல், பாதிப்பில்லாத அளவுக்கு மாற்றுதல் மீள் சுழற்சிக்கு உள்ளாக்கல் அல்லது நீக்குதல், கண்காணித்தல் ஆகிய செயல்முறைக்கு உள்ளானதாகும். கழிவு பொருட்கள் மேலாண்மையில் திண்ம, வளிம கழிவுகளை சில வேளைகளில்

எஸ்கேஎஃப் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

கதிரியக்க கருவிகளை கொண்டு அழிக்கும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

**பாதிப்புகள் :**

குப்பைகளைச் சரியான முறையில் வெளியேற்றாமையினால் பலவகையான பாதிப்புகள் ஏற்படுகின்ன. துர்நாற்றம் வீசுவதுடன சில கழிவுகளால் நோய்கிருமிகள் உருவாகி மனிதர்களை பாதிக்கின்றன.

குப்பைகள் சேரும் இடங்களில் ஈக்கள், கொசுக்கள் உருவாகி ஆபத்தான நோய்களை உருவாக்குகின்றன. மற்றும் சில நெகிழி கழிவுகள் மண்ணை மாசடைய செய்கின்றன. மேலும், நீர்வாழ் உயிரினங்களையும் பாதிக்கின்றன. உலகமெங்கும் குப்பைகளால் சுத்தமான குடிநீரை கூட பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் பல மக்கள் வாழ்கின்றனர்.

**கட்டுப்படுத்தும் வழிமுறைகள் :**

இந்தக் குப்பை சார்ந்த பிரச்சனைகளை கட்டுப்படுத்த முதல் வழி ஒவ்வொரு தனி மனிதனும் தமது குப்பைகளை தாமே சரியாக அகற்றுவதன் மூலமே இது சாத்தியமாகும். மற்றும் அரசாங்கம் இவை தொடர்பான விழிப்புணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

**முடிவுரை :**

இவ்வாறு ஒவ்வொரு மனிதர்களும் தூய்மையான பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதன் வாயிலாக வளமான தேசங்கள் உருவாகும். இதன் மூலமாக தான் மக்கள் பிரச்சனைகள் இல்லாமல் நிம்மதியாக வாழமுடியும். நினைத்தால் முடியாதது என்று எதுவும் இல்லை. ஆகையால் நாம் அனைவரும் சரியாக செயற்படுவதன் மூலமாக அடுத்தவர்களையும் சரி செய்யவேண்டும்.

**தெ. பவித்ரா**

இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

எஸ்மெகாபயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## அழகான நிலவு

வாடைக் கால நள்ளிரவு
செடி கொடியின் சலசலப்பு
வழியெங்கும் மறை நிலவு
அழகான பயணமதில்
தலைக்கோதும் இளங்காற்று
காற்றோடு கலந்த எண்ணங்கள்
கவியாக வருகிறதே
என்ன சொல்ல...

## தென்றல்

கல்லூரிக் களைப்பில் நானும்
என்னை நகைத்த வண்ணம்
என் தோழியும்...
நடக்கும் வழி ஓர்இடத்து
சல்லென காற்று
சில்லென வீச
சட்டெனக் களைப்பு
சிட்டாய் பறந்தது
தென்றலது வருடலினால்....

**சா. நுஸ்ரத்பானு**
இளம் கணிதவியல் (முதல்)

எஸ்கேஆயபரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846



இசையின் ஓவியம்
இசை ஒலிக்க
படைக்கப்பட்டது...

எஸ்மகோபாயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன்: 223243, 222846

## மொழி

மௌனம் நல்லதுதான்
இனிதான ஒரு சொல் கிடைக்கும்வரை...
வார்த்தையும் நல்லதுதான்
அது கவிதையாய்ப் பரிணமிக்கும்வரை...
கரவொலியும் நல்லதுதான்
எங்கோ ஓர் இதயம்
மௌனத்தால்...
ஆனந்தக் கண்ணீர்
சிந்தும் வரை...

## பூமி தாய்

பாரதத்தாய்க்குப் பட்டாபிசேகம்
நடத்தும் இனிய வேளையில்
நீயா நடுங்கினாய்; நன்றாக நடிக்கிறாய்!
உன்னைத் தொட்டு வணங்கியே
தொடர்வோம் எம் பணியை...
அகழ்வாரைத் தாங்கும் அன்னையே என்றோம்
அன்னைக்கு எப்படி வந்தது
அரக்கர் குணம்?

**ஞா. ரித்திகா**
இளம் கணினி அறிவியல் (முதல்)

எஸ்.மெகராயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# கற்றது கைம்மண்ணளவு..... கல்லாதது உலகளவு.....

*தித்திக்கும் தெள்ளமுதின் மேலான செந்தமிழின் புதல்வர்களை வணங்குகின்றேன்.*

*பைந்தமிழ் பிராட்டி, ஔவையின் தனிப்பாடல் கூறும் எளிய பல சிந்தனைகளில் இதுவும் ஒன்று.*

**“கற்றதுகைம் மண்ணளவு கல்லாதது**
**உலகள வென்று உற்ற கலைமடந்தை**
**ஓதுகிறாள்**” *என்றது தனிப்பாடல்.*

*கல்விக் கடவுளான கலைமகளே, தான் கற்ற கல்வி செல்வமானது எனது கையில் உள்ள சிறுதுகள்களால் ஆன மண்ணின் அளவு மட்டுமே. மேலும், தான் கற்க வேண்டியது உலக அளவில் உள்ளது எனக் கூறுகிறாள் என்கிறார் ஔவை.*

*கைம்மண்ணளவு என்பதில் பல உட்கூறுகள் உள்ளது. மண் சிறு துகள்களின் கூட்டமைப்பே. அக்கூட்டமைப்பை ஒரு மனிதனின் கையில் பிடிக்கும் போது கால் மடங்கு கீழே விழுந்துவிடும். மீதமுள்ள துகள்களில் கால் மடங்கு கையோடு ஒட்டிக்கொள்ளும். எனவே, நாம் கற்ற கல்வியானது நம் கையில் மீதம் மிஞ்சிய அரை மடங்கு மண்ணிற்கே இணையாக இருக்கும்.*

*மேலும் இவ்வுலகில், அனைத்திலும் சிறந்தவன் என்று இறைவனையே கூற முடியாது. அனைவரும் அனைத்திலும் சிறந்து விளங்கமுடியாது. அவ்வாறு திகழவும் இயலாது. ஏதேனும் ஒரு குறைபாடு இருக்கும்.*

*நான், அனைத்தையும் கற்றுவிட்டேன் என யாரேனும் கூற முடியுமா? அவ்வாறு கூறினாலும் அது மெய்யாக கூடுமா?*

எஸ்கேபாபா் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

நமக்கு ஏதேனும் சில துறைகளிலோ ஏதேனும் சில பகுதிகளைப் பற்றியோ ஒரு சில தகவல் தெரிந்திருக்கும். அதனால் எனக்கு அனைத்தும் தெரியும். நான் அனைத்தும் அறிந்தவன் என்று கூறுவானேயானால்? உண்மையில் அவன் உலகம் அறியாத பேதையே!

கல்வி என்பது கடல் போன்றது. அவற்றில் நாம் அறிந்தது சிறு பகுதிதான். அதை வைத்துக்கொண்டு நாம் பிறரை இழிவு செய்யவோ அல்லது தாழ்மைப்படுத்தவோ கூடாது. ஏனெனில், அவரவர் துறையில் அவரவர் சிறந்தவரே!

கல்வி என்பது பெருமைக்காகப் பட்டம் பெறுவதற்காக மட்டும் அல்லாமல் ஒழுக்கம் பேணுவதாகவும், பிறருக்கு மரியாதை அளிப்பதாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

ஔவையின் இந்த தனிப்பாடல் மூன்று முக்கிய எளிய கருத்துகளை கூறுகின்றது. அவை, கல்வியின் அளவு, கலைமகளே கற்கிறாள், ஓதுதல்.

நாம் கற்ற கல்வியின் அளவு என்பது இந்த உலக நுண்ணறிவு மற்றும் பொருட்களை ஒப்பிடுகையில் நம் கைம்மண்ணளவே!

மேலும் கல்விக்கடவுளான கலைமகளே தான் கற்றது குறைவென்று. மேலும் படித்துக்கொண்டே இருக்கிறாள்.

ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் அச்செயலானது வலிமைபெறும். மற்றும் செயலை செய்வோருக்கு தெளிவு கிடைக்கும். இதுவே தனிப்பாடல் கூற்று. எனவே தான் கற்றது சிறிதளவு என எண்ணி நாம் அனைவரும் அனைத்தையும் கற்று எல்லாத் துறையிலும் வல்லமை பெற்றுச் சிறந்து விளங்குவோம்.

நன்றி... வணக்கம்...!

**மு. ஆகாஷ்**
இளம் கணிணிஅறிவியல் (இடை)

எஸ்கேபாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# தங்கையாய் நீ...

கல்லூரியில் கண்டேன்
கிடைக்கப் பெற்றிராது
என்று நினைத்த
ஓர் உறவினை....
உன் அன்பின் மிச்சம்
உள்ளம் முழுதும்
நிறைந்த வண்ணம் உள்ளன
பல நேரங்களில் உடன்பிறப்பாய்
உரிமை கொண்டாடினாய்...
உறவினர்களின் உறவை
மிகுந்தும் உயரச் செய்தாய்
தந்தையாய் நான்
தங்கையாய் நீ
உறவு கொண்டோம்,
உணவு பகிர்ந்தோம்,
உணர்வுகள் உடன்...
ஊட்டி வளர்த்து உறவை
வலுப்படுத்திக் கொண்டோம்
பலமுறை விவாதங்கள்
எழுந்திருக்கலாம், வீணாக
சண்டை மூண்டிருக்கலாம்,
சொல்பேச்சு கேட்டிராத
சின்னபிள்ளை நான், விட்டுக்
கொடுக்காத செல்லப்பிள்ளை நீ....
உடன் நீ இருக்க
உயிராய் நாம் இருப்போம்...

**கு.நிதிஷ்**
இளம் வணிகவியல் (இடை)


எஸ்கேஜாப்பார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# மழையின் நிறைவு...

விண்ணிலிருந்து விழும் வான்மழை
வானத்தாய் பகிர்ந்தளிக்கும் உணவின் முறை
மண் மகிழும் மகரதத்தால்
வானப் பெண்ணின் மழை கரம் பட்டு
மண் சிலிர்க்கும் பசுமையாய்
ஆனந்தமாய் ஆயிரம் மலர்கள்,
பசியின்றி பரிதவிக்கும் ஏழை குடிசையும்
வானத்தாய்க்கு வந்தணம் செய்வார்
எங்கள் கல்லூரியும் இவ்வகையானதே,
அட்மிசன் எனும் பெருமழை
படரும் பசுமை கல்லூரி முழுதும்
ஆயிரம் நிறங்களில் மலர்க்குவியல்
வானத்தாயால் வயிற்றுக்கு உணவு
எங்கள் கல்லூரியிலிருந்து அறிவுக்கு உணவு
மழையால் அடர்ந்து வளரும் வனம் போல்
எங்கள் கல்லூரியும் தொடர்ந்து வளரும் அறிவால்

**அ. முசிரா**
இளம் வணிகவியலயல் (நிறை)

எஸ்மெகோயபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846




**வே. கீர்த்தனா**

இளம் கணிதவியல் (இடை)

எஸ்கேஜியார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# சிலம்பாட்டம் (சிலம்பம்)

**சிலம்ப அடியோசைக்கு சிறந்த இசையில்லை**
**இதற்கு இணையான கலையொன்று**
**இவ்வுலகில் இல்லை, பாடும் குயிலோசையும்**
**நாடும், சிலம்ப அடியோசை ஆடும்**
**மயிலாட்டம் அதுவும் நாடும் சிலம்பாட்டம்!**

சிலம்பம் என்பது ஒரு தடியடி தமிழர் தற்காப்புகளில் மற்றும் அல்ல தலைசிறந்த நமது தமிழரின் வீரமிக்க முதல் போர்கலை விளையாட்டு ஆகும். மன்னர்கள் போர்புரிவதற்கு தேர்ந்தெடுத்த முதல் போர் கலை இச்சிலம்பகலை ஆகும். இக்கலை தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், கண் அசைவுகள் என உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளலாம். அப்படிப்பட்ட மிக சிறந்த தரமான சூழ்ச்சிகள் நிறைந்த தற்காப்புக்கலை இச்சிலம்பக்கலை.

**கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே**
**வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி**
**தமிழ்நாடு என்பது போல**

என்பது போல நமது முன்னோர்கள் போரிடக் கையாண்ட முதல் போர்முறை விளையாட்டு இச்சிலம்ப விளையாட்டு ஆகும்.

ஆதிகாலத்தில் நமது தமிழர்கள் சிங்கம், புலி, பாம்பு போன்ற விலங்குகளிடமிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக அதனுடைய குணங்களையும், செயல்பாடுகளையும் கூர்ந்து கவனித்து, அதனை ஒரு வடிவமாக அமைத்து உருவான கலை. இச்சிலம்பக்கலை ஆகும்.

இக்கலையினை தற்போது ஆண், பெண் என இருபாலரும் கற்றுக்கொண்டு பயன்பெற்று வருகின்றனர். இவ்விளையாட்டினை கற்றுக்கொள்வதால் உடல்நிலை மிகவும் ஆரோக்கியமாகவும்,

எஸ்கேஜெகாபயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

சீராகவும் அமையும். வாதம், பித்தம், கபம் என்று சொல்லக்கூடிய இம்மூன்றும் உடலில் சமமான நிலையில் செயல்படும்.

இவ்விளையாட்டினை விளையாடும் போது மூச்சுப் பயிற்சியினையும் நம்மை அறியாமலே நாம் பெற்று வருகிறோம். குறுகிய காலத்தில் உடலுக்கு வலிமையினையும், அதிக எதிர்ப்பு சக்தியினை அளிக்கும் இச்சிலம்பக்கலை. இப்படிப்பட்ட இக்கலை நமக்கே உரியது. இச்சிலம்பக்கலை நம் நாட்டிலே வளர்ந்தகலை மூவேந்தர்கள் வளர்த்த கலை.

நெல்லை மாவட்டத்தில் கடையநல்லூருக்கு மேற்கே உள்ள மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினருள் சிலம்பரம் என்ற பெயரும் வழக்கில் உள்ளது. “சிலம்பம்” சுமார் 5000 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படுகிறது. 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அகத்திய முனிவர் 64 கலைகளில் ஒன்றாக சிலம்பக்கலையைக் குறிப்பிடுகிறார்.

சிலம்பம் பற்றி தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சிலப்பதிகாலத்தில் சிலம்பம் ஆடுவதற்கான கம்பு, கத்தி போன்றவை ஒரு கடையல் விற்கப்படுவதாகவும் அவற்றை வெளிநாட்டினர் மிக ஆர்வமுடன் வாங்கிச் செல்வதாகவும் குறிப்புகள் உள்ளன.

திருக்குறளில் “கோல்” என்ற பெயரிலும்,

கலிங்கத்துப்பரணியில் “வீசு தண்டிடை கூர்மழு ஒக்குமே” என்ற வரிகள் மூலம்,

“தண்டு” என்ற பெயரிலும் கம்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவிளையாடற்புராணத்திலும் சிலம்ப விளையாட்டு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கி.பி. 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த “பதார்த்த குண சிந்தாமணி” என்ற நூலில் சிலம்பம் விளையாடுவதால் வாதம், பித்தம், கபம் ஆகியவை சமநிலைப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

எஸ்ஜெகாயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

இவைகளைத் தவிர கம்பு, சூத்திரம், குறுந்தடி, சிலம்பம், நடசாரி போன்ற ஓலைச்சுவடிகளிலும் உள்ளன. இச்சுவடிகளில் உள்ள பாடல்கள் அகத்திய முனிவர் சிலம்பம் பயின்ற பிறகே யோகக்கலை, மருத்துவம் போன்ற கலைகளைப் பயின்றதாகத் தெரிவிக்கின்றன.

இச்சிலம்பாட்டத்தில் பலபிரிவுகள் உள்ளன. குத்து வரிசை, நெடுங்கம்பு, அலங்கார வீச்சு, வேல்கம்பு வீச்சு, ஒற்றைவாள் வீச்சு, இரட்டைவாள் வீச்சு, ஒற்றை சுருள் வீச்சு, இரட்டை சுருள் வீச்சு, இரட்டைகம்பு வீச்சு, மான் கொம்பு (மடுவு), ஆயுத கோர்வை சோடி, குழு ஆயுத வீச்சு, கம்பு சண்டை என பலப்பிரிவுகள் உள்ளன.

சிலம்பத்தில் ஒத்தைச் சுவடு, பிரிவுச் சுவடு, ரெட்டு வீச்சு, பூட்டுப்பிரிவு, மடு சிரமம், எடுத்தெறிதல், நெடுங்கம்படி, கோபட்டா, வாள்வீச்சு, பீச்சுவா, சுருள்பட்டா, லேசம், செண்டாயுதம், வளரி, இடிகட்டை, கட்டாரி, கண்டக் கோடாரி, வீச்சரிவாள், வெட்டரிவாள், கல்துணி போன்ற பலவகையான ஆயுதப் பிரிவுகளும் உள்ளன.

கம்பு சண்டையில் பலவகைகள் உள்ளன. ஆசு சண்டை, நாகம் பதினாறு, கோழிஆசு, பாம்பு ஆசு, நாய் ஆசு, போன்ற ஆசு சண்டை பாடமுறைகள் உள்ளன. நாகம் 16 சண்டைப்பாடம் முழுவதுமாக பாம்பின் அதாவது ராஜநாகத்தின் செயல்பாடுகளை கூர்ந்து கவனித்து உருவாக்கப்பட்ட பாடமுறையாகும். அதே போல நாய், கோழி, வாலி ஆகிய மிருகங்களிடமிருந்து கூர்ந்து கவனித்து உருவாக்கப்பட்ட சண்டை பாடமுறைகள் பலவகைகள் இச்சிலம்பாட்டத்தில் உள்ளன.

குருவணக்கம் (சலாம வரிசை) என்று சொல்லக்கூடிய சிலம்பாட்டம் தனக்குப் பயிற்றுவிக்கும் குருவிற்கு மரியாதை சொல்லும்விதமாக அமையும். இக்குருவணக்கம் முழுவதுமாக

எஸ்கேபாபா டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

காளைமாட்டின் செயல்பாட்டினை குறிக்கும். இத்தகைய இக்கலையானது நமது தமிழ்நாட்டின் தலைச்சிறந்த கலை. இவ்வுலகில் உள்ள அனைத்துக் கலைகளுக்கு தாய்க்கலை எமது சிலம்பக்கலை.

மூத்தகலை, முதற்கலை இதர போர்கலைகளின் தாய்கலை. அதுவே எங்கள் சிலம்பக்கலை...

தென்திசை தோன்றி உலகம் முழுவதும் பரவிக்கொண்டு இருக்கக்கூடிய வீரக்கலை சிலம்பம் என்னும் போர்க்கலை.

கள்வரையும் கம்பிருந்தால் கல்வனையும் தம்
காலடியில் விழ வைப்பதே எம்
சிலம்பக்லை.....
கம்பு தனை சுழற்றுபவரை
உச்சி முதல் பாதம் வரை
ஒரே நேர்வினையில்
நிறுத்தி வைப்பதே எம்
சிலம்பக் கலை...

வீரமிக்க இச்சிலம்பக்கலையினை அனைவரும் கற்று பயிற்சிபெற வேண்டும். இக்கலையினை அதிகாலையில் பயிற்சிக்கொள்வது உடலுக்கு மிக வலிமையையும், ஆரோக்கியத்தையும் அளிக்கும்.

இவ்வீரமிக்க கலைகளில் ஊமைத்துரை சுருள்பட்டா வீசுவதிலும், சின்னமருது வளரி வீசுவதிலும் வல்லவராக விளங்கினார்.

சிலம்பம் ஒருவனுக்கு உலகம்.
உலகம் ஒருவனுக்கு அற்புதம்
சோதனைகளுக்கு துணிந்தவனே
சாதனைக்குச் சொந்தக்காரன்...!

எஸ்எம்கோபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்!
வாழிய நமது தமிழரின் வீரமிக்க
இப்போர்க்கலையினை (சிலம்பக்கலையினை)
கண்டு மெய்சிலிர்த்தேன்..!

*இக்கலையினை பயிற்றுவிப்பதிலும் பயின்று வருவதிலும் நான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். இக்கலையினை எனக்கு கற்பித்த எனது ஆசான் அவர்களுக்கு நன்றி.*

*தலைச்சிறந்த நமது வீரக்கலையான (தாய்க்கலை) எமது சிலம்பக்கலைக்கு நான் என்றும் தலைவணங்குகிறேன்.*

*வாழ்க தமிழ்...*
*வளர்க சிலம்பம்....*
*வெல்க கலை....*

**ப. அட்சயா**
இளம் கணிதவியல் (நிறை)

## கடந்த கால நினைவுகள்...

உண்ண உணவில்லாவிடினும்
உலா வரும் உணர்வுகளுக்கு விடுப்பில்லை
வீண் விடயத்தில் விளையாட்டாய்
விளைந்த விபரீத விளைவு...
விவகாரத்துடன் வில்லங்கமானாலும்,
விடுமுறையின்றி, விடாமல் விரட்டுகிறது
விண்ணின் விலையாக - வீண்
வினையினை விலைக்கு வாங்கி
விட்டுப்போன வினாக்களுடன்
விடைக்காக விடுபெற்று
வினாடிக்கு வினாடி வீங்கி
வெடிக்கிறது உ(எ)ன் இதயம்.

**ர. இளவேனில்**
இளம் தமிழ் (இடை)

எஸ்கேபாயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# தமிழச்சி

தவழும் தாமரையாக தரணியில் மலர்கிறாள்
அவள் இட்ட மை கண்களுக்கு மட்டுமல்ல
பேனாவிற்கும் தான்...
கனவுகளைக் கைபிடிக்க காகிதங்களைக் கட்டவிழ்த்தாள்
தடைகளை உடைத்தெறிய கல்வி என்னும்
படைகளைத் திரட்டினாள்...
திரையிட்டுப் பூட்டிய உரிமைகளை
தன் திறமையைக் கொண்டு திறந்தாள்...
நாட்டின் தலைமையாக,
வாழ்க்கை என்னும் போர்க்களத்தின் சிப்பாயாக,
அறிவியலின் ஞானியாக,
மருத்துவத்தில் முதன்மையாக,
தைரியத்தின் தீயாக இருந்தும்...
அவளுக்குப் புரிவதில்லை ஆழ்மனதின் ஆசைக்கும்
பிறர் அனுமதி வேண்டும் என்று....

**இ. சுபிக்ஷா**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

எஸ்கே ராயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## இலை

நான் நிறையும் இடத்தில்
ஓய்விருக்கும்...
சூழும் காற்றில் உயிர் இருக்கும்
விடியல் பொழுதில் பனித்துளி
என் மடியில் உறங்கிக் கிடக்கும்
நான் யார்?


**செ. பிரியதர்ஷினி**
இளம் வணிகவியல (இடை)

## என் அன்பு அப்பா

பாமரனாய் நிலத்தினை
உழவு செய்த போதிலும்
கூலிக்காரனாய் தோளில்
மூட்டைகளைச் சுமந்த போதிலும்
தன் பிள்ளையின் கரங்களில்
சூரியக் கதிர்கள் தீண்டக் கூடாதென
கரம் பிடித்து ரசித்து
பள்ளிக்குக் கூட்டிச் சென்று
தான் காணாத கல்வியை
தன் பிள்ளை பெற வேண்டுமென
உடல்நோக உழைக்கும்
தந்தையே முதல் தெய்வம்!

**பா. ரட்சதா**
இளம் கணினி அறிவியல் (முதல்)

எஸ்மெகாபயர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846




**இரா. சுருதிகா**
இளம் கணினி அறிவியல் (நிறை)

எஸ்கேஎஸ்கோபால் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## பள்ளி பருவம்

பள்ளியை நோக்கி ஓடினோம் அன்று
கணினியைத் தேடிச் செல்கிறோம் இன்று
மலரும் மொட்டுகளுக்கு வழிகாட்ட வழியில்லை
மழலை பேச்சைக் கூட கேட்க முடியவில்லை
கனிவான கண்டிப்பும் அன்பான அதட்டலும்
தொலைந்து போனது இன்று!
திரை வழியாக கற்கிறோம்
திசை மாறிப் போகிறோம்
பாடத்தைக் கற்காமல் பாதை கிடைக்குமா
இந்நிலை நீடித்தால் வெற்றி காணமுடியுமா
நேரில் பார்த்த ஆசிரியர் முகம்
நீங்காத நினைவில் என் மனம்
இயந்திரத்தில் கற்று இயந்திரம் ஆனோம்
பள்ளிக்குச் சென்றால் தான் மாணவர் ஆவோம்.

**இரா.சொ. ஸ்ரீநிதி**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

## ஓவியம்

விரிந்திருந்த வெள்ளைக் கம்பளத்துடன்
சண்டையிட்ட வண்ணங்கள்...
அதனை சமாதானம் செய்த
கைவிரல்கள்...
அர்த்தமுள்ள சண்டையில் உணர்ந்தேன்
ஓவியம் என்னும் என் காதலை...

**செ. பிரியதர்ஷினி**
இளம் வணிகவியல (இடை)

எஸ்கேபாபா டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846





எஸ்கேபார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன்: 223243, 222846





எஸ்கேஜாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846




**ஸ்ரீ. ஸ்ரீநாத்**

இளம் வணிகவியல் (இடை)

எஸ்மெகாபஜார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன்: 223243, 222846

# நூலோடு உறவாடு

புத்தகம் பேசுமா!
புத்தகம் பேசியதா!
பேசத் தொடங்கினால்...
புத்தரைப் போன்ற அமைதிதான்
புறவியாய் வேகமுமில்லை
எனக்கு எவரும் கடிவாளம்
அணிவிக்கவும் இயலாது.
இயலாததை முயலவைப்பதில்
தவறவிடுவதில்லை...
என்னை வாசிப்பவர் என்னை
வாசிக்கும் முன் நான் அவரை
வாசித்து விடுவேன்...
வரி வடிவம், வரை வடிவம் என
பன்முகத்தை நூறிலும், என்னிலும் வைப்பேன்...
நான் பேசாததாலே இங்குப் பலர்
பேசுகின்றனர்...
புத்தகம் பேசுமா, புத்தகம் பேசுகிறதா....
புத்தகம் பேச வைக்கும்...

**ர. இளவேனில்**
இளம் தமிழ் (இடை)

எஸ்.எம்.செகாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

# இரயில்வே கேட்

ராஜா காலை சிற்றுண்டியை அவசர அவசரமாக முடித்துவிட்டு 8.15 பஸ்ஸை பிடிக்க கிளம்புகிறான். அவனுக்கு வேலைநேரம் 9 - 4 மணி என்றாலும் இரண்டு பஸ் மாறிதான் அவன் ஆபீஸ்க்கு போக வேண்டும். அவனிடம் ஒரு ஓட்டை சைக்கிள் தான் உள்ளது. அந்த சைக்கிளை பேருந்துநிலையத்தில் போட்டுவிட்டு பஸ் ஏறுவான். பலமுறை அந்த சைக்கிளை நம்பி அவன் நடுத்தெருவில்தான் நிற்பான். பல நேரங்களில் அவன் மனதில் தோன்றும் ஒரே எண்ணம். “இந்த சைக்களை யாராவது திருடிவிடமாட்டார்களா?” என்று தான். அந்த சைக்கிளும் பாவம்தான், அவன் 6ஆம் வகுப்பு சேர்ந்ததும் அவனுடைய அப்பா அதை பரிசாக அளித்தார். அன்று முதல் இன்று வரை ராஜா அதில்தான் பயணம் செய்கிறான்.

முதல்நாள் போகும் வழியெல்லாம் அதனை பற்றிய சிந்தனைதான், அவன் “இன்றும் நான் அதில் மாட்டிக்கொள்ளக்கூடாது” என்று தனக்குள் சொல்லிக்கொண்டே செல்கிறான். அவன் நேற்று மாட்டிக்கொண்டதைப் போலவே இன்றும் அந்த இரயில்வே கேட்டில் மாட்டிக்கொண்டான். நேற்று போலவே இன்றும் வேலைக்கு தாமதமாகச் செல்கிறான். அவன் சக தோழர்கள், என்ன “ராஜா... இன்றுமா!” என கேலியாகச் சிரித்தனர்.

வீடு திரும்பும் பொழுது கோபமாக, “நாளை மட்டும் அந்த கேட்டு போட்டு இருக்கட்டும், அதை உடைத்து விடுகிறேன்!” என்று கூறிவிட்டு செல்கிறான். ராஜா கோபமாக இருப்பதால் அவனுடைய அக்கா மெல்லமாக “இரயில்வே கேட்டை சேதப்படுத்தினால் ஆயிரம் ரூபாய் அபராதத்துடன் ஆறு மாதம் சிறைதண்டனையும் நிச்சயம் உண்டு” என்று தன் அம்மாவிற்கு மட்டும் கேட்கும்படியாக கூறினாள். கண்மணியோ ராஜாவிற்கு இரண்டு வயது மூத்தவள். தம்பியின் மீதும் குடும்பத்தின் மீதும் அதிக பாசம் மிக்கவள். அவள் தன்

எஸ்.கே.பாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

தம்பியை படிக்க வைக்க வேண்டுமென்பதற்காக பள்ளி படிப்புடன் நின்று விட்டாள். அதனால் தான் அவளின் திருமணம் தள்ளிக் கொண்டே போகிறது.

ராஜாவுக்கும் ஆசைதான் தன் அக்காவை மேற் கொண்டு படிக்க வைக்கவேண்டுமென்று, ஆனால் என்ன செய்வது அவனுடைய சம்பளம் வங்கிக்கணக்கில் சேர்வதும் எடுப்பதும் ஒரே நேரமாக இருக்கும். ஏனென்றால் அவன் தன் கல்விக் கடனை அந்த வங்கியின் கிளையில் தான் எடுத்துள்ளான். அவன் படிப்பை முடித்தும் கூட அதற்காக வாங்கிய கடன் இன்னும் நிலுவையில்தான் உள்ளது. அவனுடைய அப்பா வாங்கும் சம்பளத்தில் தான் குடும்பம் ஓடுகிறது. அவனுடைய அம்மா சமையல் அறையில் தோசை ஊற்றிக்கொண்டே இரவு உணவிற்கு அனைவரையும் அழைத்தார். அப்பாவும் ராஜாவும் இரவு உணவு உண்பதற்காக அமர்ந்தனர். கண்மணி இருவருக்கும் தோசையைப் பரிமாறினாள். “என்றும் இல்லாமல் இன்று அம்மாவின் தக்காளி சட்னி சுவையாக உள்ளது” என்று ராஜாவும் அவனுடைய அப்பாவும் பேசிக்கொண்டே சாப்பிட்டனர். அம்மா தோசை கரண்டியை கையில் வைத்துக்கொண்டு “காலையில் என்ன ஆச்சு?” என்று ராஜாவிடம் கேட்டார். ராஜா காலையில் நடந்ததை மிகவும் பொறுமையாக கூறினான். அதற்குள் தோசை கருகி விட்டது. அம்மா தோசையை திருப்பிபோட்டு விட்டு, மீண்டும் ராஜாவிடம் “நீ காலையில் நேரத்தோடு எழுந்து, சீக்கிரமாக கிளம்பி போ” என்றாள். உடனே அப்பாவும் தன் பங்கிற்கு “சைக்கிள்ல தான போற, கேட்டை பூந்து (நுழைந்து) போகக் கூடாதா?” என்று ராஜாவிடம் கேட்டார். உடனே அம்மாவும் அக்காவும் சிரித்தனர்.

ராஜா 10ஆம் வகுப்பு வரை, அப்பா சொல்லியது போல கேட்டில் நுழைந்துதான் செல்வான. ஆனால் 11ஆம் வகுப்பில் ஒரு நாள், இரண்டு காவலர்கள் பூட்டியிருக்கும் கேட்டை கடந்தபின் வழிமறித்து “எங்க இவ்வளவு அவசரமாக போற!

எஸ்கேராயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

ஒரு 5 நிமிடம் உன்னால நிக்க முடியாதா?'' எனக்கேட்டு, அவனை அங்கேயே நிற்க வைத்தனர். கேட்டைத் திறந்து அனைவரும் போய்விட்டனர். ஆனால் ராஜா மட்டும் அங்கேயே நின்றான். பிறகு மூன்றாவதாக ஒரு காவலர் ராஜாவிடம் சென்று, ''இங்க பாரு தம்பி இரயில்வே கேட் ஊழியரோட நோக்கம், உங்கள நிற்க வைப்பதில்லை. அவர்களோட நோக்கம் எல்லாம் உங்கள பாதுகாக்குறதுதான்'' என்று கூறி அரைமணி நேரத்திற்கு பிறகு அனுப்பினார். இதனை வீட்டில் அம்மாவிடமும் அக்காவிடமும் மட்டும் தான் கூறினான். அவனுடைய அப்பாவிற்கு இந்த விஷயம் இன்று வரை தெரியாது.

அப்பா தன் மனைவியையும் மகளையும் பார்த்து, ''என்ன ஆச்சு உங்க இரண்டு பேருக்கும், ஏன் இப்படி சிரிக்கிறீங்க'' என்று கேட்டதும் கண்மணி ஒளிந்துக் கொண்டாள். அம்மா உடனே, ''ஒன்னும் இல்ல'' என்று சமாளித்துவிட்டார். பிறகு, கண்மணி ராஜாவைப் பார்த்து ''ராஜா உன்னோட சம்பள பணம் மட்டும் இருந்தா இந்நேரம் உனக்கு ஒரு வண்டி வாங்கி இருக்கலாம்'' என்று கூறி பெருமூச்சு விட்டாள். அனைவரம் சாப்பிட்டு விட்டு உறங்க சென்றுவிட்டனர்.

**2வது நாள் :** மறுநாள் காலையில் ராஜா நேரத்தோடு எழுந்து கால்மணி நேரத்திற்கு முன்பாகவே வேலைக்கு கிளம்பிவிட்டான். இன்று கேட் போடுவதற்கு முன்பாகவே கேட்டை கடந்துவிடுகிறான். அதனால் வேலைக்கும் சீக்கிரமாக போகிறான். அதற்கும் அவன் தோழர்கள் ''என்ன! இவ்வளோ சீக்கிரமாவா'' எனச் சிரித்தனர். ராஜா அவர்கள் கூறியதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால், அவர்களைப் பார்த்து ஒரு சிறு புன்னகையோடு தலைஅசைத்து விட்டுத் தன் வேலையைப் பார்க்கிறாள். மாலை வீடு திரும்பும்போது கேட்டில் நிற்கிறான். எதேச்சையாக அவன் கேட் போடும் ஊழியரை பார்த்தான். அங்கே இருப்பவர் ராஜாவின் கல்லூரி நண்பரான பகவதி. ராஜா பகவதியை

எஸ்கேஜெயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

பார்த்த சந்தோஷத்தில், சைக்கிளை அங்கே நிறுத்திவிட்டு பகவதியின் அருகில் சென்று பேசினான். ராஜா பகவதியிடம் "என்ன நண்பா, எப்படி இருக்க? உன்ன பார்த்து எவ்வளவு நாளு ஆகுது, வீட்டுல எல்லோரும் எப்படி இருக்காங்க?" என்று கேள்வியை அடுக்கிக் கொண்டே போனான். ராஜாவின் கேள்விகளுக்கு சுருக்கமாக விடை அளித்துவிட்டு வேகமாக அலுவலகத்துள் ஓடினான். "என்ன இருக்கிறது அங்கு?" என்று நினைத்துக்கொண்டு ராஜாவும் பின் தொடர்ந்து போய் பார்க்கிறான். ராஜா "இந்த கேட்டு எப்ப திறக்கும் எப்ப மூடியிருக்குமுனே தெரியல பகவதி" எனக் கூறுகிறான். அதற்கு பகவதி அந்த பணியில் சேர்வதற்கு முன்பு தாமும் அப்படித்தான் நினைத்ததாகவும் பணியில் சேர்ந்த பிறகுதான் அங்கே இருக்கும் வேலைச் சுமை பற்றி அறிந்ததாகவும் கூறினான். இதனைக் கேட்ட ராஜா "இதில் என்ன வேலைச்சுமை உள்ளது? கேட்டை திறப்பதும் மூடுவதும் ஒரு வேலையா?" என்று தன் மனத்தில் சலிப்பாக நினைத்துக்கொண்டு, வெளியே சோகமாக இருப்பது போல காட்டிக்கொள்கிறான். ராஜா தான் மனத்தில் நினைத்ததை வெளியே கூறிவிட்டோமே என்று எண்ணுபடியாக பகவதியின் பதில் அமைந்தது.

பகவதி ராஜாவைப் பார்த்து "எல்லாரும் இதில் என்ன வேலைச்சுமை இருக்கிறது, இதெல்லாம் ஒரு வேலையா? என்று மனத்தில் நினைப்பவர்கள் சிலர், அதை வெளிப்படையாக கேட்பவர்கள் பலர்" என்று வேதனையாக கூறினான். இதனைக் கேட்ட ராஜா உண்மையில் மிகவும் சோகத்துடன் மறுவார்த்தை பேசுவதற்குள், அவன் தொலைபேசி ஒலிக்கிறது. அவன் தொலைபேசியை எடுத்து யாரென்று பார்த்தான், அப்போதுதான் அவனுக்கு ஞாபகம் வருகிறது, கோவிலுக்கு செல்வதற்காக அவன் அம்மா அவனிடம் சீக்கிரம் வருமாறு கூறியது. அதனால் தன் நண்பனிடம் கூறிவிட்டு வீட்டிற்கு வேகமாக செல்கிறான். அவன் நண்பனும் அடுத்து கேட்டை போடுவதற்காக உள்ளே செல்கிறான்.

எஸ்மெகாயபாரி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

இரவு உணவு உண்ணும் நேரத்தில் தான் அவன் அம்மா அவனிடம், "இன்னக்கி எங்க போன? ஏன் லேட்டு?" என்று சிறிது கோபமாகக் கேட்டார். அப்போது அவன் "நான் தான் தவறு செய்துவிட்டேன, நான் காலையில் நேரத்தோடு எழுந்தால் நான் ஏன் கேட்டில் நிற்கப்போகிறேன்?" என்று தன்மேலேயே கோபம் கொள்கிறான். இதைக் கேட்ட அம்மா, "இப்போ என்ன ஆச்சு? எதுக்கு இப்போ பொலம்புற?" என்று கேட்டார். அவன் அன்று மாலையில் தன் நண்பனைப் பார்த்ததாகவும், அவனுக்கு வேலை சுமை இருப்பதாகவும் கூறினான். கண்மணி ராஜாவிடம் "உன் நண்பன் எங்கே வேலை பார்க்கிறான்?" என்று கேட்டாள். அதற்கு ராஜா, நாம் அன்றாடம் கடந்து செல்லும் கேட்டில் தான் ஊழியராக பணியாற்றுகிறான்" என்று கூறினான்.

அப்பா உடனே, "எல்லா வேலைகளிலும் சுமை இருக்கும் தான். விருப்பத்தோடு எந்த வேலை செய்தாலும் அதில் உள்ள வேலை சுமை சுமையாகத் தெரியாது என்று கூறி அனைவரும் உறங்கும்படியாகவும் கூறினார்.

***3வது நாள் :*** ராஜா நேற்று போலவே இன்றும் காலையில் சீக்கிரமாக எழுந்து கேட் அடைப்பிற்கு முன்பாகவே சென்றான். அன்று மாலை வீடு திரும்பும் போது கேட்டில் நிற்கிறான். அப்போது ஒருவர் "இந்த கேட்டு போடுறவன் எப்பதான் கேட்ட திறப்பானு தெரியலயே?" என்று மிகவும் சலித்துக்கொண்டு சொன்னார். அதனை ராஜாவும் பகவதியும் கேட்டனர். பகவதி ராஜாவைப் பார்த்து "தினமும் இப்படித்தான் நடக்கும்" என்றபடி தலையசைத்து கண்களாலேயே பேசுகிறான். பதிலுக்கு ராஜாவும் "நானும் இப்படித்தான் நினைத்தேன்" என்று மனதில் நினைத்துக்கொண்டு, செய்கையாலும் "இவர்கள் இப்படித்தான், விட்டுச்செல்!" என்றபடி கூறினான்.

**ச. பவானி**
இளம் உயிரித்தொழில்நுட்பவியல் (இடை)

எஸ்மெகாபஜார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846




எஸ்மெகாபயார் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் | 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

## ஹைக்கூ

பட்டாசு ஆலைக்குப்
போனார்கள்
பசி எனும்
தீயை..!


பசியின் சூடு
தணிகிறது
தேநீர் குவளையில்

மூச்சுவிட அலைகிறது பூமி
மரங்களை மாடிகளுக்குள்
புதைத்து விட்டு
அழியும் இயற்கை!

நித்தமும் தோற்கிறான்
நேரத்தை மிச்சப்படுத்துவதில்
கருமி!

**க. கார்ணியா**
இளம் கணினி பயன்பாட்டியல் (இடை)

எஸ்கேபாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846



**K. சாருமதி**
இளம் வணிகவியல் (இடை)

எஸ்கேராபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் 122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை. போன்: 223243, 222846

எஸ்மெகாபாபர் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன்: 223243, 222846

டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
122-பி, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.
போன் : 223243, 222846